DEPOSITION OF WITNESS.
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO. 2, SIVAKASI
Case No. CC. 105 /2022
**Depositions of PW 2**

| | | | |
|---|---|---|---|
| Name | காசிராஜன் | Caste | |
| Father's name | | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 15th Day of July 2025

**<u>15.07.2025</u>**
(எதிரி ஆஜர். )
**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது அப்பையாநாயக்கன்பட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு சம்பவம் நடக்கும் சமயத்தில் சிவகாசி கிழக்கு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தேன். கடந்த 20-10-2021 ஆம் தேதியன்று 14.00 மணிக்கு நான், முதல் நிலை காவலர் கணேஷ் கண்ணன் ,சுரேஷ் கண்ணன் ஆகியோருடன் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தபோது, கண்ணா நகர் பகுதியில் நாராயண ரெஸ்டாரண்ட் அருகே செல்லும்போது, பின்னால் பெயர் விலாசம் கேட்டுத் தெரிந்த சிவகாசியை சேர்ந்த நாராயணன் மகன் குருமூர்த்தி என்பவர் போலீஸ் பார்ட்டியை கண்டதும் ஓட எத்தனித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் அரசால் லாட்டரி விற்பனை தடை செய்யப்பட்ட நிலையில் வெளிமாநில லாட்டரிகளை விற்பனை செய்தால்

போலீஸார் பிடித்துவிடுவார்கள் என்ற எண்ணத்தில் M என்ற எழுத்துடன் 20-10-21 என்ற தேதியுடன் எழுதப்பட்ட துண்டு சீட்டுகளை விற்பனைக்கு வைத்திருந்ததை ஒப்புக்கொண்டார். M என்ற எழுத்து மாகாராஷ்ட்ரா மாநில லாட்டரி சீட்டு என்று சொல்லி வாடிக்கையாளர்களை நம்ப வைத்து ஏமாற்றி விற்பனை செய்து வருவதாக ஒப்புக்கொண்ட எதிரியை கைது செய்தேன்.

(2) பின்னர் எதிரி ஆஜர் செய்த M என்று எழுதப்பட்ட 20-10-2021 என்ற தேதியிட்ட 6 துண்டு சீட்டுக்களை அத்தாட்சி தயார் செய்து என்னுடன் இருந்த போலீஸார் முன்னிலையில் கைப்பற்றினேன். என்னிடம் காண்பிக்கப்படும் **அத்தாட்சி (அ.சா.ஆ.-1)** நான் தயார் செய்ததுதான். பின்னர் 15.30 மணிக்கு எதிரியை வழக்கு சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து எதிரியை திரேக பரிசோதனை செய்து, நிலைய பாரா வசம் ஒப்படைத்தேன். நிலைய குற்ற எண். 468/2021 பிரிவு 5 , 7 (3) லாட்டரி ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் பிரிவுகள் 420, 468 இதச கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். சாட்சியால் பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியை தகுந்த வழிகாவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன், நான் கைப்பற்றிய துண்டு சீட்டுக்களை படிவம் -91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **படிவம்- 91 அ.சா.ஆ.-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் M என்று எழுதப்பட்ட 20-10-2021 ஆம் தேதியிட்ட துண்டு சீட்டுக்கள்தான் என்னால் எதிரியிடமிருந்து அத்தாட்சியில் கைப்பற்றப்பட்டதாகும். சாட்சியால் கைப்பற்றப்பட்ட M என்று எழுதப்பட்ட 20-10-2021 ஆம் தேதியிட்ட துண்டு சீட்டுக்கள் (6 எண்ணிக்கை)

**அ.சா.ஆ.–4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மேல்விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் நாங்கள் வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதுதான் எதிரியை பார்த்தோம் என்றால் சரிதான். சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திலிருந்து நாராயணபுரம் புதூர் சென்று பின்னர் ரத்தினவிலாஸ் பேருந்து நிறுத்தம் வழியாக நாராயண ரெஸ்டாராண்ட் வரவேண்டும் என்றால் சரிதான். சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திலிருந்து நாராயணபுரம் புதூர் வடக்குபக்கத்தில் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. கிழக்கு காவல் நிலையத்திலிருந்து நாரயணபுரம் புதூர் எந்த திசையில் உள்ளது என்றால் கிழக்கு திசையில் உள்ளது. சிவகாசி கிழக்கு காவல் நிலையத்திலிருந்து நாராயணபுரம் புதுருக்கு எந்த வழியாக சென்றோம் என்றால் ஞாபகமில்லை. ரோந்து சென்றதாக சொல்லப்படும் நாளில் எத்தனை வாகனங்களில் சென்றோம் என்றால் மூவரும் தனித்தனி வாகனங்களில் சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் எந்தெந்த பகுதிக்கு ரோந்து சென்ற பின் நாராயணரெஸ்டாரண்ட் சென்றோம் என்றால் போஸ்காலனி வழியாக சென்றோம்.

(2) நாராணபுரம் புதூர் சாலையில்தான் நாராயண ரெஸ்டாராண்ட் உள்ளது என்றால் சரிதான். நாராயண ரெஸ்டாராண்டுக்கு நாங்கள் செல்லும்போது ரத்தின விலாஸ் பேருந்து நிறுத்தம் வழியாக செல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சிவகாசி நகராட்சி எல்கைக்குள் வருகிறதா என்றால் ரத்தினவிலாஸ் பேருந்து நிறுத்தத்திலிருந்து நாராணபுரம் புதூர் செல்லக்கூடிய கிழமேல்

சாலையில் தெற்கு பக்கமாக நாராயண ரெஸ்டாரண்ட் உள்ளது என்றால் சரிதான். நாராயண ரெஸ்டாரண்ட் எந்த திசையில் உள்ளது என்றால் மேற்கு நோக்கி உள்ளது. போஸ் காலனியிலிருந்து வேறு எந்த இடத்திற்கும் ரோந்து சென்றோமா என்றால் போஸ் காலனி வழியாக சம்பவ இடத்திற்கு சென்றோம். அ.சா.ஆ.–4 துண்டு சீட்டுக்களில் எழுதப்பட்டிருந்த விவரங்கள் யாரால் எழுதப்பட்டது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ.–4 துண்டு சீட்டுகள் கைப்பற்றப்படும்போது மாலை சுமார் 4 மணி இருக்குமா என்றால் மதியம் சுமார் 2.30 மணிக்கு கைப்பற்றினோம். நாங்கள் ரோந்து சென்ற விவரத்தினை பொதுநாட் குறிப்பில் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம். நாராயண ரெஸ்டாராண்ட் உரிமையாளர் யார் என விசாரித்தோமா என்றால் இல்லை. மேற்படி நாராயண ரெஸ்டாராண்ட் உரிமையாளர் எதிரி என்பது தெரியுமா என்றால் தெரியாது.

(3) எதிரி ஓட எத்தணித்ததாக கூறப்படும் நாராயண ரெஸ்டாராண்ட்டிற்கு வெளி பக்கமா, உள் பக்கமா என்றால் வெளிபக்கம் வைத்து. நாராயண ரெஸ்டாராண்ட்டை சுற்றி என்ன அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் ஞாபகமில்லை. நான் சொன்ன நாள் நேரம், இடத்திற்கு ரோந்து பணி செல்லவில்லை என்றாலும் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த ஒரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி நாராயண ரெஸ்டாரண்ட் உரிமையாளர் என்றும், அவர் லாட்டரி சீட்டுக்கள் விற்க வேண்டிய அவசியமில்லை என்றும், எதிரிமீது முன்விரோதம் கொண்டவர்கள் சொன்னதன் பேரில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடம் பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியிடமிருந்து பொது

மக்கள் யாரையும் லாட்டரி சீட்டுக்கள் வாங்கினார்கள் என்றும், எதிரி பொது மக்களிடம் லாட்டரி சீட்டுக்களை விறப்னை செய்ய முயன்றார் என்றும் யாரையும் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். எதிரிக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது போடப்பட்ட பொய்யான வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.